ஒவ்வொருவருக்கும் மாதத்திற்கு எவ்வளவு செலவிடப்படுகிறது? அதில் இருந்து குணம் பெற்று வெளியேறுகிறவர்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித்தர அரசு முன்வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள அரசினர் மறுவாழ்வு இல்லத்தில் 261 ஆண்களும், 76 பெண்களும், 56 சிறுவர்களும்—ஆக மொத்தம் 393 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் வயது வந்தவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் அன்றாட உணவுக்காக செலவிடப்படும் தொகை ரூ. 2.30 பைசா, 12 வயதுக்குட்பட்டவர்களுக்கு ரூ. 1.15 பைசா, எலும்புருக்கி நோயாளிகளுக்கு ஒரு நோயாளிக்கு ரூ. 3.77 பைசா வீதம் செலவிடப்படுகிறது.

திரு. வே. அரங்கராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டில் இருக்கின்ற தொழுநோய் பிச்சைக்காரர்கள் பார்ப்பதற்கு அருவருப்பாகவும், தொழுநோய்க்குச் சரியாக வைத்தியம் பார்த்துக் கொள்ளாததால் மற்றவர்களுக்கு அதைப் பரவவிடும் முறையிலும் இருக்கிறார்கள். அதோடு, வெளிநாட்டினர் வருகின்றபோது அவர்கள் துறைமுகங்களின் முன்னாலே பிச்சை எடுத்துக்கொண்டு இருப்பதாலே, கட்டாயமாக அவர்களைப் பிடித்து வந்து, வைத்தியச் சிகிச்சை அளிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லத்தில் சேர்ந்துள்ளவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி செய்யப்பட்டு வருகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடை மருத்துவ மனைகள் ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண் 888.—திரு. செ. செம்மலை: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போது இரண்டு கால்நடை மருத்துவ மனைகளைக் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் எத்தனை?

(ஆ) அனைத்து ஊராட்சி—ஒன்றியங்களிலும் இரண்டு கால்நடை மருத்துவமனைகளை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) 179 ஊராட்சி ஒன்றியங்கள்.

1981 ஏப்ரல் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சினை.

(அ) மன்ற உறுப்பினர் அந்நிய நாட்டின் தூதுவர் பணியை ஏற்றல்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்று முன்தினம் இதே அவையில் தங்களுடைய கவனத்திற்கு ஒரு பிரச்னையைக் கொண்டு வந்தேன். * * * *

(முற்பகல் 10-00)

THIRU V. KRISHNAMURTHY: Sir, he should not be permittd to raise it in the House.

(கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றையதினம் என்னிடத்திலே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் மாதிரி பல கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கொடுத்தார்கள். அதை இங்கே எழுப்பினாலும் அதுபற்றி தீர்ப்பளிக்க எந்த விதமான அதிகாரமும் எனக்கு இல்லை. ஏனென்றால் இது இங்குள்ள உறுப்பினர் பற்றிய பிரச்சினை. அதுபற்றித் தீர்ப்புக் கூறுகின்ற இடத்திலே நான் இல்லை. என்னால் தீர்ப்புக் கூறவும் முடியாது. ஆனால் இதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்பதை மட்டும் சொல்லலாம் என்று சொன்னேன். நான் ஒன்றும் இதிலே கருத்து சொல்வதற்கில்லை. அரசின் தரப்பிலும் இதற்குப் பொறுப்பு இல்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்புக்குப் பின்னால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி . . . . (குறுக்கீடு) இது குறித்து நானும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஆண்டித்தேவர் அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் . . . (கூச்சல், குழப்பம்).

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.